ஓம் சரவணஜோதியே நமோ நம

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1480

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.10.2023,** புதன்கிழமை

1. அறமாக உலகோர்க்கு ஞானம்தனை
   ஆற்றல்பட வழங்கி தர்மம் காக்கும்
   வரம்பெற்ற ஞான தேசிகனே
   வள்ளலே வாழும் ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் முதல் நாள், 18.10.2023, புதன்கிழமை)
   ஆசிதந்து சுப்ரமணியர் யானும்
   அரங்கனுள் இணைந்து இருக்க
3. வாசிவென்ற ஞானிகள் எல்லாம்
   வலம்வந்து அரங்கனோடு காப்புதர
   தருகவே அரங்கன் குடில் நோக்கி
   தரணியோர் வருக வருக
4. கர்மவினைகள் எல்லாம் அகன்றுமேவி
   கலியுகத்தில் ஞானவான்கள் ஆவரப்பா
   அப்பனே அரங்கனால் தேடும் அன்பர் கூட்டமே
   அகிலத்தில் ஞானிகளாக மாறி வரம் கூடி இந்த உலகத்தை மாற்றநேரும்
5. வல்லமைபட அரங்கன் தொடர்பு கூட்டி
   வலுவான சடாட்சர தீட்சை ஏற்று
   இல்லாமை எங்கும் போக்கும் வண்ணம் இனிதே
   எல்லாவகையிலும் தர்மசாலைகளாக உலகமெங்கும் நிரப்பி
6. நிரப்பி அரங்கன் விரும்புகின்ற
   நிலவுலகம் தர்மலோகமாக
   ஆகவே உலகில் அற்புதங்கள்
   அரங்கனாலும் அரங்கன் தொண்டர்களாலும் நடந்தேறும்

7. வகைபட அன்னதனால் உலகோர்
வரம்பெற அரங்கன் குடில் நோக்கி வர
பெருமைபட சடுதி உலகமாற்றம்
பிரணவ சக்தியாகவே நிரம்பி அற்புதம் காணக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–